இதழ்-77

01.11.2024

# துமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்

**வடிவமைப்பாளர்**
ச. மதுஷா
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்துளை...

03 எமனேறும் வாகனமாகி விட்ட டிப்பர்கள்
05 நீங்கள் பேயை பார்த்திருக்கிறீர்களா?
10 வழி காட்டுமா இராமர் பாலம்?
14 மௌனமே தீர்வு
17 மகிமைகள் நிறைந்த சிவனொளிபாத மலை
21 அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு
23 பூமிக்கு வெளியே இருந்து தீபாவளி வாழ்த்து
24 இணுவிலில் இலவச மருத்துவ நிலையம்
26 மற்றவர்களுக்காக சிந்தித்து செயல்படும் ஜப்பானியர்கள்
27 என் கால்கள் வழியே...
33 இலண்டனில் நடந்த அபயத்தின் ஆண்டு விழா
34 பாம்பும் ஏணியும் விளையாட்டின் கதை





# எமனேறும் வாகனமாகி விட்ட டிப்பர்கள்

ஆசிரியர் பதிவு

எமது மண்ணில் டிப்பர் ரக பார வாகனங்களால் ஏற்படும் விபத்துக்கள் கவலைக்குரிய அளவை எட்டியுள்ளன. குறிப்பாக பள்ளி மாணவர்கள் விபத்துக்குள்ளாகி உயிரிழக்கும் சம்பவங்கள் அதிர்ச்சியளிக்கின்றன. இந்த ஆசிரியர் தலையங்கம் டிப்பர் வாகனங்களால் ஏற்படும் பிரச்சனைகளை ஆழமாக ஆராய்ந்து அவற்றை தீர்ப்பதற்கான சில வழிமுறைகளை பரிந்துரைக்கிறது.

## டிப்பர் வாகனங்களால் ஏற்படும் பிரச்சனைகள்

* அதிக வேகம்: டிப்பர் வாகன ஓட்டுநர்கள் பெரும்பாலும் அதிக வேகத்தில் வாகனத்தை ஓட்டுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

* சாலையின் நிலை: பல சாலைகள் பழுதடைந்துள்ளன. இதனால் டிப்பர் வாகனங்கள் சமநிலை இழந்து விபத்துக்குள்ளாகின்றன.

* ஓட்டுநர்களின் அலட்சியம்: சில ஓட்டுநர்கள் போதையில் வாகனம் ஓடுவது, போன் பேசிக்கொண்டே ஓடுவது போன்ற அலட்சியமான செயல்களில் ஈடுபடுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

* வாகனங்களின் நிலை: பல டிப்பர் வாகனங்கள் பழுதடைந்த நிலையில் இயக்கப்படுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

* சட்ட விரோத செயல்கள்: சட்டவிரோதமாக மணல், கற்கள் போன்றவற்றை ஏற்றிச் செல்வதால் டிப்பர் வாகனங்கள் வேகமாக செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

* பள்ளி மாணவர்களின் பாதுகாப்பு: பள்ளி மாணவர்கள் சாலையை



கடக்கும் போது எச்சரிக்கையாக இருக்காததும் விபத்துக்களுக்கு ஒரு காரணமாக அமைகிறது.

## முன்வைக்கப்படும் தீர்வுகள்

* கடுமையான சட்டங்கள்: டிப்பர் வாகன ஓட்டுநர்கள் மீது கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். விதிமுறைகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

* சாலைகளை சீரமைத்தல்: சாலைகளை சீரமைத்து பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய வேண்டும்.

* வாகன பரிசோதனை: டிப்பர் வாகனங்கள் அவ்வப்போது பரிசோதனை செய்யப்பட்டு பாதுகாப்பான நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

* பள்ளி நேரங்களில் டிப்பர் வாகனங்களுக்கு தடை: பள்ளி மாணவர்கள் அதிகளவில்





சாலைகளை கடக்கும் நேரங்களில், குறிப்பாக பள்ளிகள் ஆரம்பிக்கும் மற்றும் முடியும் நேரங்களில் டிப்பர் வாகனங்கள் போன்ற பெரிய வாகனங்களின் இயக்கத்தை தடை செய்வது, விபத்துக்களின் விகிதத்தை குறைக்க ஒரு பயனுள்ள நடவடிக்கையாக இருக்கும். இதனால், மாணவர்கள் பாதுகாப்பாக சாலைகளை கடக்க முடியும்.

* பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு: பள்ளி மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலை செல்வதற்கு பாதுகாப்பான பாதையை உறுதி செய்யாமல் ஆண்டுதோறும் சிறுவர் தினங்கள் கொண்டாடுவதிலும் சிறுவர் உரிமைகள் பற்றி விவாதிப்பதிலும் பயனில்லை. உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க துமி வலியுறுத்தி நிற்கிறது.

# நீங்கள் பேயை பார்த்திருக்கிறீர்களா?



பேய், பிசாசு, பூதங்களில் எல்லாம் உங்களிற்கு நம்பிக்கை உண்டா? நம்பிக்கை இல்லாவிட்டாலும் "பயம்" இல்லையா?

பேய் என்றால் எல்லோருக்குமே ஆர்வம், அச்சம், திகில், ஏளனம் கலந்ததோர் உணர்ச்சி.

உள்ளம் அருண்டிருந்தால் இருண்டது எல்லாம் பேய் தானே. பேய் என்ற பெரும்பயம் உலகப் பொதுமறையானது.

எல்லா தேச வாழ்வியலிலும் அது ஏதோ வடிவத்தில் கலந்துள்ளது. மேற்குலகில் இவ்வச்சம் ஒரு பண்டிகையாகவே வலுப்பெற்றுள்ளது. ஆவிகள், மறைவுகள், மற்றும் மரணத்துடன் தொடர்புடைய பழமையான சடங்குகளிலிருந்து தோன்றிய பண்டிகை கலோவீன் (Halloween) பண்டிகை. மாலை நேரத்தில் உயிரிழந்தவர்களின் ஆவிகள் பூமியில் திரிகின்றன என்று நம்பியவர்களின் பழக்கங்களில் கலந்து வளர்ந்துள்ளது இந்தப் பண்டிகை.

இது கெல்டிக் மக்கள் கொண்டாடிய சவின் (Samhain) என்ற பண்டிகையிலிருந்தே உருப்பெற்றுள்ளது.

கெல்டிக் மக்கள் என்பவர்கள் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து போன்ற இடங்களில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தனர். Samhain என்பது அவர்களின் புதிய ஆண்டின் தொடக்கம் ஆகும். அவர்களது ஆண்டு நவம்பர் 1 அன்று



ஆரம்பிக்கிறது. இந்த நாளில், கோடை முடிந்து குளிர்காலம் ஆரம்பமாகும். குளிரின் கொடுமை உணர்ந்த அவர்கள் இக்காலத்தை மரணத்தை நெருங்கும் காலம் என்று நம்பினர்.

கெல்டிக் மக்கள் அக்டோபர் 31 இரவில் உயிரிழந்தவர்களின் ஆவிகள் பூமிக்கு வருவார்கள் என்று நம்பினர். இதனைக் கொண்டாடும் விதமாக அவர்கள் தீப்பந்தங்கள் ஏற்றி பயங்கர ஆவிகளைப் பயமுறுத்தும் விதமாக வித்தியாசமான உடைகள் அணிந்தும் திரிவார்கள்.

இது கடவுள்களை பசியாற்றுவதற்கான சடங்குகளாகவும், ஆவிகளின் அதிர்ஷ்டம் பெறுவதற்கான முறையாகவும் இருந்தது. பின்னர், கிறிஸ்துவ சமயத்தின் ஆட்சி வந்த பிறகு, இது All Saints' Day அல்லது All Hallows' Day என்று மாற்றப்பட்டது. அவ்வாறே அக்டோபர் 31 ஆனது All Hallows' Eve என்று அறியப்பட தொடங்கியது. இதுதான் பின்னர் Halloween என்று மாற்றம் பெற்றது.

பழைய காலங்களில் ஆவிகளைச் சரியான முறையில் விரட்டுவதற்கு ஆவிகளிடம் "Trick or treat" என்று கேட்பது ஒரு பிரபலமான முறையாக இருந்துள்ளது.

காலப்போக்கில், கலோவீன் எனும் பயத்தில் இருந்து வெளியே வந்து, குழந்தைகள் வினோத உடை அணிந்து வீடுகளில் "trick or treat" என்று வேடிக்கையாக கேட்டு கொண்டாடி மகிழும் கொண்டாட்டமாக இது மாறியுள்ளது.

பொதுவாக இத்தினத்தில் செம்மஞ்சள் நிறமும் கறுப்பு நிறமும் அதிகமாகப் பாவிக்கப்படும். செம்மஞ்சள் நிறம் அறுவடைக் காலத்தை குறிக்கும். தமிழர் வாழ்வியலின் தைப்பொங்கல் போல் மேற்குலகின் கோடை முடிவு நாளின் அறுவடைக்



கொண்டாட்டமாகவும் கலோவீன் பண்டிகை கொள்ளப்பட்டுள்ளது. கறுப்பு நிறம் இறப்பை குறிக்கும். அத்தினத்தில் பேய்கள் பிசாசுகள் போலப் பெரியவர்களும், சிறியவர்களும் வேடமிட்டு ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று வேடிக்கையாக விருந்து தரும்படி கேட்பார்கள். பெரியவர்கள் தெருவிலே நின்று கொள்ள, சிறுவர், சிறுமிகள் பேய் பிசாசுபோல வேடமிட்டு வாசலில் வந்து வேடிக்கையாக ஏமாற்றுவார்கள். சில சமயங்களில் வீட்டில் இருப்பவர்களும் பயங்கரமான வேடமணிந்து விருந்து கேட்டு வந்த பிள்ளைகளுக்குப் பயம் காட்டுவார்கள். அதன்பின் பிள்ளைகள் கொண்டுவந்த தட்டிலே இனிப்பு, சொக்லட் போன்றவற்றைப் போடுவார்கள்.

இந்த வாரத்தில் பெரியவர்கள் குழந்தைகளுக்குப் பேய் பிசாசு கதைகள் சொல்வதிலும், அப்படியான பயங்கரப் படங்களைக் குடும்பமாகச் சென்று பார்ப்பதிலும் அதிக நேரத்தைச் செலவிடுவர். நகரப் பகுதிகளில் வாழ்வோர் இரவு நேரங்களில் கலோவீன் கேளிக்கை விருந்துகளுக்கு கலோவீன்






ஆடைகள் அணிந்து முகத்திற்கு மைபூசிச் செல்வர்.

கலோவின் தினத்திலன்று சூனியக்காரி, கறுப்புப் பூனை, வௌவால், ஆந்தை, சிலந்தி, சிலந்திவலை, எலும்புக்கூடு, மண்டை ஓடு, பூசணிக்காய், விளக்குமாறு, சூலம் போன்ற விளையாட்டுப் பொருட்களால் வீட்டின் வாசலை அலங்கோலம் செய்து வைத்திருப்பர். பெரிய பூசணிக்காயை எடுத்து அவற்றைப் பயங்கர முகங்களைப் போலச் செதுக்கி அதன் வடிவைமாற்றி வாசலில் வைத்திருப்பர். இருட்டில் இருக்கும் அவற்றில் மெழுகு திரிகளை ஏற்றி மெல்லிய வெளிச்சத்தை ஏற்படுத்தியிருப்பர். பயங்கரமான இடத்தை நோக்கிப் போவது போன்ற ஒரு சூழலை செயற்கையாக ஏற்படுத்தியிருப்பர்.

மெழுகுவர்த்திகளால் ஒளிரும் பயங்கரமான முகங்களைக் கொண்ட பூசணிக்காய்களே கலோவீன் பருவத்தின் உறுதியான அறிகுறியாகும்., இதுவே

ஜாக்-ஓ-லான்டர்ன் (Jack O' Lantern) எனப்பட்டது. இந்த கொண்டாட்டமுறை தொடர்பான ஒரு சுவாரசியமான கதை உண்டு. இந்த கதை ஜாக் (Jack) என்ற ஒரு மது பாவனையாளன் பற்றி கூறுகிறது.

ஜாக் பற்றிய கதை ஐரிஷ் நாட்டுப்புறக் கதைகளிலிருந்து வந்துள்ளது.

கதையின்படி, ஜாக் ஒரு தந்திரக்காரனாவும் ஆகப்பெருங் கஞ்சனாவும் இருந்தான். ஒருநாள் பிசாசை தன்னுடன் குடிக்க விருந்திற்கு அழைத்தான் ஜாக். ஆனால் அந்தக் குடி பானத்திற்கு பணம் செலவழிக்க விரும்பாத ஜாக் அந்தப் பானங்களை வாங்குவதற்குப் தேவையான ஒரு நாணயமாகவே மாறுமாறு விருந்திற்கு வந்த பிசாசிடமே வேண்டினான். பிசாசும் அவ்வாறே செய்து தன்னைப் பணமாக மாற்றிக் கொண்டது. ஜாக் அந்தப்பணத்தை எடுத்து தன் சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டான். வெள்ளியாலான சிலுவைக்கு அருகிலிருந்த சட்டைப்பைக்குள் வைத்தமையானது அந்தப் பிசாசு மீண்டும் தனது அசல் வடிவத்திற்கு மாறுவதைத் தடுத்தது. ஜாக் இறுதியில் பிசாசை விடுவிக்க சில நிபந்தனைகள் வைத்தான். பிசாசும் அந்த நிபந்தனைக்கு இணங்கியதால் மீண்டும் தன் அசல் வடிவத்தைப் பெற்றது. பிசாசு ஜாக்கை ஒரு வருடத்திற்கு தொந்தரவு செய்ய கூடாது என்றும் மற்றும் ஜாக் இறந்தால், பிசாசு ஜாக்கின் ஆன்மாவைக் கோர கூடாது என்கிற நிபந்தனைகளின் கீழே பிசாசு விடுதலையானது.



அடுத்த ஆண்டு, ஜாக் மீண்டும் பிசாசை ஏமாற்றி ஒரு பழத்தை பறித்துவரும்படி பிசாசை மரத்தில் ஏற்றினான். பிசாசு மரத்தின் மேல் இருந்தபோது, ஜாக் மரத்தின் பட்டைகளில் சிலுவையின் அடையாளத்தை செதுக்கினான். இதனால் பிசாசு கீழே வரமுடியாமல் தவித்தது. அப்போதும் ஜாக் பிசாசிடம் ஒரு நிபந்தனை வைத்தான். இன்னும் பத்து ஆண்டுகளுக்கு தன்னை தொந்தரவு செய்ய கூடாது என்று உறுதியளிக்கும் வரை பிசாசு கீழே வர முடியாது என்றான்.

அதற்கிடையில் விரைவிலே, ஜாக் இறந்தான். புராணத்தின் படி, கடவுள் அத்தகைய விரும்பத்தகாத நபரை சொர்க்கத்திற்குள் அனுமதிக்க மாட்டார். ஜாக் விளையாடிய தந்திரத்தால் வருத்தப்பட்ட பிசாசு, அவனது ஆன்மாவைக் கோரமாட்டேன் என்ற தனது வார்த்தையைக் கடைப்பிடித்து, ஜாக்கை நரகத்திலும் அனுமதிக்கவில்லை. அதனால் பிசாசு ஜாக்கின் ஆன்மாவை - தனது வழியை ஒளிரச் செய்ய - எரியும் நிலக்கரியுடன் இருண்ட இரவில் அனுப்பி வைத்தது. ஜாக்கின்

ஆன்மா அந்த எரியும் நிலக்கரியை செதுக்கப்பட்ட ஒரு பூசணியில் வைத்து அன்றிலிருந்து பூமியில் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. ஐரிஷ் மக்கள் இந்த பேய் உருவத்தை "ஜாக் ஆ.்.ப் தி லான்டர்ன்" என்றும் பின்னர் "ஜாக் ஓ"லான்டர்ன்" என்றும் குறிப்பிடத் தொடங்கினர்.

இந்த கதை மூலம், மக்கள் Jack O' Lantern-ஐ உருவாக்கி, பிசாசினை பயமுறுத்தவும், மற்ற ஆவிகளைத் தட்டிப் பார்ப்பதற்கான முறையாகக் கொண்டனர். இதுவே, இன்று கலோவின் பண்டிகையில் அழகாக அலங்கரிக்கப்படுவதற்கான வழியாக மாறியுள்ளது.

இந்தக் கதைகள் பெரும்பாலும் பண்பாட்டு சித்தாந்தங்களின் ஒரு பகுதியாக உள்ளன. அவை பல நூற்றாண்டுகளாக மக்கள் வாய்மூலம் கதை சொல்லுவதன் மூலம் பரவியுள்ளது. இந்த கதைகள், உண்மையில் நடந்த சம்பவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடும்.

ஆனால், மனிதர்களின் மரபுகள் மற்றும் நம்பிக்கைகள் போல, இவை உண்மையாகவே இருக்கலாம் அல்லது உண்மையை அடிப் படையாகக் கொண்டு உருவானவையாகவும் இருக்கலாம்.
இதற்காக நிலையான ஆதாரங்கள் கிடைக் காது. ஆனால் இவைகள் மனிதனின் உருவாக்கம் மற்றும் கற்பனையின் ஒரு பகுதி என்பதால் அவற்றின் மீதான நம்பிக்கை மனிதனின் பரிணாமவளர்ச்சியோடு வளர்ந்து வந்துள்ளது.

இந்த பண்டிகைகள் மக்களுக்கு அன்பு, சிரிப்பு, மற்றும் உறவுகளைத் திரும்ப பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன.

கிழக்கில் அசுரன் ஒருவன் அழிந்ததை தீபமேற்றி கொண்டாடும் தீபாவளிப்பண்டிகையும், மேற்கில் பூசணியில் ஒளியேற்றி கொண்டாடும் கலோவீன் பண்டிகையும் ஒளியின், மகிழ்ச்சியின் வெவ்வேறு வடிவங்களே அன்றி யாவும் ஒரே மூலநோக்கத்தில் இணைகின்றன.

உலகின் பல பகுதிகளில் வாழும் மக்களை மகிழ்வால் ஒன்றிணைக்கும் இந்த ஒக்டோபர் 31 ம் திகதி உலகின் ஓர் ஆர்வமிகு திருநாளாகும்.

பண்டிகைகள் உங்களை நன்கு மகிழ்விக்கட்டும். உலகம் முழுதும் இந்த ஒரு நாள் இன்பமாக இருந்துவிட்டுப் போகட்டும்.








கனிஸ்ரா ஜெயகாந்தன்
ஊடகக்கற்கைகள்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# வழி காட்டுமா இராமர்பாலம்...?

இலங்கை - இந்திய நட்புறவின் சின்னமான இராமர்பாலம், 1860 ஆம் ஆண்டு இந்திய கடற்படையைச் சேர்ந்த ஆங்கிலேயரான ஏ.டி.டெய்லரின் சிந்தனையில் உதித்த திட்டமாக விளங்குகின்றது. 1876ஆம் ஆண்டு முதற்கட்டமாக பல சவால்களுக்கு மத்தியில் கடலுக்குள் 145 தூண்களுடன் இராமர் பாலத்தின் கட்டுமானப்பணிகள் ஆரம்பமாகி, 1913இல் நிறைவடைந்தது. 1914 ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி முதல் இப்பாலத்தனூடான சேவைகள் “போட் மெயில்” என்ற பெயரில் ஆரம்பமாகின. சென்னையில் இருந்து தனுஸ்கோடிவரை ரயில் பயணம், அதனை தொடர்ந்து தனுஸ்கோடியிலிருந்து - தலைமன்னார் வரையிலான 36km நீண்ட கப்பல் பயணம், பின்னர் மீண்டும் தலைமன்னாரிலிருந்து கொழும்பு வரை ரயில் பயணம் என்று போக்குவரத்து சேவை நீடித்திருந்தன. இது குறைந்த கட்டணத்தில் இந்தியா சென்று வருவதற்கு இது பேருதவியாக இருந்தது. “திரை கடல் ஓடியும் திரவியம் தேடு” என்ற பழமொழிக்கு ஏற்ப இலங்கை - இந்திய வர்த்தகர்கள், தொழிலாளர்கள் இக்கப்பல் சேவையை மையமாகக் கொண்டு பெரும் பொருள் ஈட்டி இலாபம் அடைந்தனர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இப்பாலத்ததை பற்றி 500 ஆண்டுகளுக்கு முன்னர் வால்மீகி அவர்களால் எழுதப்பட்ட இராமாயணத்தில் இளவரசன் ராமன் அனுமானின் குரங்கு படையின் உதவியுடன் பாக்கு நீரினை ஊடாக பாலம் அமைத்து இலங்கைக்கு அணிவகுத்து சென்றது எப்படி என்பதை பற்றி விபரிக்கின்றார்.

அது மாத்திரமன்றி சுகந்திரப் போராட்ட காலகட்டத்தின் கவிஞரான சுப்ரமணிய பாரதியார், தனது கவிதையில் “சிங்கள தீவினிற்கோர் பாலம் அமைப்போம் சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்.” எனவும் கூறுகின்றார்.



இராமர் பாலம், அனுமான் பாலம், ஆதாம் பாலம், சேதுராமர் பாலம் ஆகிய பெயர்களாலும், 1984 ஆம் ஆண்டு இலங்கைக்கும் - இந்தியாவிற்கு இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தோ - சிலோன் பாலம் எனவும் இப்பாலம் அழைக்கப்படுகின்றது. 1964ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இலங்கையில் இருந்த 07 இலட்சம் இந்திய வம்சாவளியைச்சேர்ந்த மக்களை பதுளையிலிருந்து ரயிலில் ஊடாக தலைமன்னார்வரை அழைத்துச்சென்று அங்கிருந்து கப்பல் வழியாக இராமேஸ்வரத்திற்கு கொண்டு சென்றதாக வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன.

1948ஆம் ஆண்டு இராமானுஜம் என்ற பெயரிலான கப்பல் சேவையானது வாரத்தில் மூன்று நாட்கள் திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் இந்தியாவிலிருந்து - இலங்கைக்கும் செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய தினங்களில் இலங்கையிலிருந்து - இந்தியாவிற்கும் கடல்வழி மூலமாக போக்குவரத்தை மேற்க்கொண்டது. இக்கப்பலில் அதிகபட்சமாக 400 பேர் வரையில் பயணம் செய்யலாம், இருப்பினும் சில விசேட காலங்களில் அதிகமான சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துமையால் குறித்த காலப்பகுதியில் விசேட போக்குவரத்து சேவைகள் இடம்பெற்றுள்ளன என்பதனையும் தெரியக்கிடைக்கின்றது. இராமர் பாலத்தை அண்டிய தனுஸ்கோடியில் 1964ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலின் காரணமாக இப்பாலத்தினுடான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டு மீண்டும் சேவைகள் வழமைக்கு திரும்பின.




இலங்கையில் ஏற்பட்ட 1983 ஆம் ஆண்டு கலவரம் உக்கிரமடைந்து உள்நாட்டுப்

போராக மாற்றம் பெற்றதன் காரணமாக இப்பாலத்தின் ஊடான சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. 2001-2004 ஆம் ஆண்டு வரை அப்போதைய பிரதமரான ராணில் விக்ரமசிங்க இப்பாலத்தின் செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுத்தார். அரசாங்க மாற்றத்தினால் அவருடைய திட்டங்கள் கைகூடவில்லை. 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மீண்டும் இலங்கை - இந்தியா பாலம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தியாவின் சேது சமுத்திர திட்ட வீழ்ச்சி காரணமாக இராமர் பாலத்தினை அமைப்பதற்கான செயல்பாடுகள் மீண்டும் கைவிடப்பட்டன.


2022 ஆம் ஆண்டு ஜூலைமாதம் ஜனாதிபதியாக திரு. ரணில் விக்ரமசிங்க பதவியேற்ற உடன் மீண்டும் இப்பாலம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் நிலவழித்தடத்தை உருவாக்குதல், இரு நாடுகளின் மின் கட்டணங்களுக்கு இடையில்





ஒரு தொடர்பை ஏற்படுத்துதல், எரிபொருள் குழாய் கட்டுமாணம், சம்பூர் சூரிய சக்தி திட்டம், டுபே மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுதல், இரு நாடுகளுக்கும் இடையிலான கடல்வழி பயண போக்குவரத்து சேவையை தொடங்குதல் தொடர்பாக பல விடயங்கள் குறித்து பேசப்பட்டன .

இப்பின்புலத்தில் குறித்த பாலமானது மீண்டும் அமைக்கப்படுமாக இருந்தால் இரு நாடுகளுக்கும் இடையில் பயண நேரம் குறைக்கப்படுவதுடன், தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு குறைந்த விலையில் பொருட்களைக் கொண்டு வரவும் முடியும். மேலும் வரலாற்று, சமய, சமூக ரீதியாகவும் இந்தியாவிற்கும் - இலங்கைக்கும் இடையிலான கலாச்சாரங்களை பரிமாற்றிக் கொள்வதற்கும், சுற்றுலா, வணிகம், வர்த்தகம் மூலமான உறவுகளை வலுவான முறையில் பகிர்ந்து




கொள்வதற்கும் இது சாத்தியமாக அமையும்.

அத்துடன் இராமர் பாலத்தை அடிப்படையாகக் கொண்டு டுபே (Liquefied Natural Gas) திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு குழாய், எண்ணை மற்றும் எரிவாயு ஆய்வுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறு பல நன்மைகள் காணப்பட்டாலும் தலைமன்னார் வழியான கப்பல் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்படுமாக இருந்தால், இலங்கை கோள - பிராந்திய ரீதியான அரசியலில் பல பாதகமான விளைவுகளையும் எதிர்நோக்க வேண்டிய சூழல் உருவாகும்.

இவ்வாறு சமூகத்தில் பலவிதமான கருத்துக்கள் நிலவி வருகின்ற நிலையில் மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் எவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டாலும் அவை மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அபிவிருத்தி திட்டங்களாக அமைய வேண்டும் என்பதே நாட்டின் சாதாரண பொது மக்களின் எதிர்பார்ப்பு. வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இராமர் பாலம் மீண்டும் அமைக்கப்படுமானால் அதனூடாக சாமானிய மக்களும் நன்மை பெறுவார்கள் என்றால் இந்த பாலத்தை மக்களின் பாவனைக்கு ஏற்றவகையில் மீண்டும் கையளிப்பதற்கு ஏற்ற திட்டங்களை இரண்டு நாட்டு அரசாங்கங்களும் மேற்கொள்ள வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு இரு அரசாங்களும் தமது அபிவிருத்திக்கான கொள்கைத் திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்பது குறித்த சமூகத்தை சேர்ந்த பெரும்பான்மையினரின் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது.



# மௌனமே தீர்வு

~தமிழ் மகன்~

”என்ன மலர் இண்டைக்கு நேரத்தோட எழும்பிட்டாய் போல,”

““ம்ம்ம்......”

““என்ன ம்ம்ம்???”

““என்னாச்சு உடம்புக்கு எதும் முடியலயா?”

““இல்லயே!”

““அப்புறம் ஏன் வழமைக்கு மாறா எதோ பேய் அறைஞ்ச போல அமைதியா இருக்கிறாய்?”

““சீ அப்பிடி ஒண்டுமில்லை.”

““சரி. நேரத்துக்கு எழும்பியிருக்கிறாய். சாப்பாடு எதும் செய்தனியா? இல்லாட்டா இண்டைக்கும் வெளில சாப்பிடச் சொல்லப் போறியா? காலைலயும், மதியத்திலயும் கடைச்சாப்பாடு சாப்பிட்டு நாக்கு செத்துப்போட்டுது.”

““இல்லை இல்லை. இப்ப சாப்பிட தோசையும் சட்னியும் இருக்கு. மதியத்துக்கும் சாதம் வடிச்சு எல்லாம் ரெடியா கட்டி வச்சிருக்கன். நீங்க சாப்பிட்டிட்டு எடுத்திட்டு போக சரி. ”

““என்ன சொல்றாய்? மதியச்சாப்பாடும் செய்து வச்சிருக்கியா? கிட்டத்தட்ட 1 மாசத்துக்கு அப்புறம் இந்த வார்த்தை உன்னட்ட இருந்து வருது. சரி சரி எனக்கு நேரமாகிடிச்சு நான் போயிட்டு வாறன். நீ கவனமா இரு.”

“ம்ம்ம் சரி. கவனமா போயிட்டு வாங்க.”

என்று கூறி வழியனுப்பி விட்டு அவள் வேலையள் எல்லாத்தயும் முடிச்சிட்டு, புத்தகம் வாசிக்கவென இருக்கையில் அமர்ந்தாள். கண்கள்



புத்தகத்தை நோட்டமிடுகின்றன. ஆனால் அவளின் எண்ணங்களோ அங்கில்லை. எதையோ யோசித்து மனசு கலங்கீட்டு இருக்கிறத அவளோட ஈர விழிகள் காட்டிக்குடுத்தன.

ராமும், மலரும் காதல் திருமணம். இருவருமே வெவ்வேறு மதத்தை சேர்ந்தவர்கள் எண்டதால, இருவரோட வீட்டுக்காரரோட எதிர்ப்பையும் மீறி திருமணம் செய்து இருவரும் தனியாகவே வாழ்ந்து வருகின்றனர். 3 மாசத்துக்கு முன்னமே திருமணம் முடிந்தது. ஆரம்பத்தில இருவரும் ஒருத்தரில ஒருத்தர் அன்போடும், அக்கறையோடும் தான் இருந்தனர். யார் கண் பட்டுச்சோ தெரியல. ஐ.ரி கொம்பனி ஒண்டுக்கு புதுசா வேலைக்கு போன ராம் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகீட்டான். தினமும் இரவில் குடிச்சிட்டு தான் வருவான். அதால இருவருக்கும் இடையில மனக்கசப்பு ஏற்படத்தொடங்கீட்டுது. மலரும் ஆரம்பத்தில இருந்த போல ராமோட பழகிறேல. அவனை சரியா கவனிக்கிறேல. வேலைக்கு போற நேரங்களில சாப்பாடு செய்து குடுக்கிறேல. அவன் வேலைக்கு போற வரை நித்திரையா இருக்கிற போல பாசாங்கு செய்யிறது எண்டு இருவருக்கும் இடையில விரிசல் அதிகரிக்க தொடங்கீட்டுது. வீட்டுக்காரரையும் தூக்கியெறிஞ்சிட்டு ராமை நம்பி வந்த மலருக்கு இது மன அழுத்தத்தை ஏற்படுத்தி விட்டது. கொஞ்சம் கொஞ்சமா தன்னைத்தானே தனிமைப்படுத்த தொடங்கினாள்.

இது தான் விதி. மனம் நொந்து தினம் தினம் இப்பிடி சண்டை போடுறதால என்னவாகப் போகுது?இவளவு சொல்லியுமே அவர் திருந்தல. இனி கடவுள்ட கையில தான் எல்லாம். அவரை கட்டினவள் எண்ட ரீதியில என்னோட கடமையை செய்திட்டு இருக்க வேண்டியது தான்.அது தான் சரி என்று ஒரு முடிவுக்கு வந்தாள்.

மதியம் அவளுக்கு அழைத்த ராம்,

"“சாப்பிட்டியா மலர்? காலையில ஒரு மாதிரி இருந்தனி.” எண்டு கேக்க,

"“ம்ம் சாப்பிட்டன்..” என்று கூறிவிட்டு,

"“சரி நான் உடுப்புகள் அலம்பணும். வைக்கிறன்.” எண்டுட்டு போனை வச்சிட்டாள்.

ராமுக்கோ மனசு குடைஞ்சிட்டே இருந்திச்சு.எப்ப பாத்தாலும் துடிப்போட இருக்கிறவள். எதுக்காக இப்பிடி இருக்கிறாள் எண்டு யோசிச்ச படியே தனது வேலையையும் கவனிக்க தொடங்கினான்.

பொழுது கழிந்து ராம் வழமை போல போதையிலே வீடு வந்து சேர்ந்தான். ஆனால் வழமைக்கு மாறாக மலர் சண்டை எதும் போடாது, ராமுக்கு சாப்பாடு எடுத்து மேசையில வச்சிட்டு போய் தூங்கீட்டாள். இவ்வாறாகவே சில நாட்கள் உருண்டோடின.

சில நாட்களின் பின் ராமிற்கு மலரோட திடீர் மாற்றத்திற்கான காரணம் புரிந்தது. அவளோட மன வலியையும்,

தன்னால அவள் எந்தளவுக்கு மனதளவில பாதிக்கப்பட்டிருக்காள் எண்டதயும் உணர்ந்து கூனிக்குறுகி நின்றான். தன்னோட தப்பை உணர்ந்த ராம் கொஞ்சம் கொஞ்சமா குடிப்பழக்கத்தில இருந்து மீண்டு வந்ததோடு, மலரையும் பழைய நிலைக்கு கொண்டு வந்தான். இருவரும் புதிதாக தமது காதல் வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழத் தொடங்கினர்.

***'தீர்க்கப்படமுடியாத பிரச்சனை என்று இங்கு எதுவுமே இல்லை. நாம் கையாளும் உத்திகளை பொறுத்தே ஒவ்வொரு பிரச்சனைகளிற்கான முடிவுகளும் அமையும். பல சந்தர்ப்பங்களில் மௌனங்கள் வெகு சீக்கிரமே பிரச்சனைகள் அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடும்.'***

## இலண்டனில் செஞ்சொற்செல்வருக்கு கௌரவம்


இலண்டனில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் உலக சைவ தொண்டர் “கலாநிதி ஆறுதிருமுருகன்” ஐயா அவர்களுக்கு ஈலிங் அருள்மிகு கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் 13.10.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணி முதல் இரவு 10மணி வரை கௌரவ நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது. பெருந்தொகையானோர் கலந்து சிறப்பித்தார்கள்.








செ. அபிகேஷகன்
ஊடகத்துறை மாணவன்
யாழ். பல்கலைக்கழகம்



# மகிமைகள் நிறைந்த சிவனொளிபாதமலை

இலங்கையின் மழை மண்டலங்களில், பசுமையான மலைகள் மற்றும் வண்ணமயமான இயற்கை காட்சிகள் கொண்ட இடமாக சிவனொளிபாதமலை அமைகிறது. இது, ஆன்மீகத்துடன் இணைந்த ஒரு தனித்துவமான பகுதியாக, சுற்றுலாப் பயணிகளையும் பக்தர்களையும் ஈர்க்கும் ஒரு பகுதியாக திகழ்கிறது. சிவனொளிபாதமலை, தமிழர்களின் தத்துவங்களை பிரதிபலிக்கும் இடமாகவும், சிவபகவானின் அருள் பெறும் ஆலயமாகவும் முக்கியத்துவம் கொண்டது. சிவனொளிபாதமலை, இலங்கையின் வடக்கு மண்டலத்தில் அமைந்துள்ள ஒரு மலைகாட்சி ஆகும். இங்கு வந்தால், மலைச்சீலைகள், பசுமை நிறத்தால் கண்ணை கவரும் காடுகள் மற்றும் தென்மேற்கரையில் நீலமாக பரவிய கடலின் காட்சிகள் அனைத்தும் கண்களை குளிர்விக்கும்.

## சிவனொளிபாதமலை அமைவிடம்

இந்த மலையானது இரத்தினபுரிக்கு வடகிழக்கே சுமார் 40 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. கொழும்பிலிருந்து ஹட்டன் செல்லும் வீதியில் உள்ள கினிகத் தேனையை அடுத்து வரும் கரோலினா சந்தியிலிருந்து தெற்கு நோக்கி நோட்டன் பிரிட்ஜ் - லக்சபான - மவுசாக்கல ஊடாக நல்லதண்ணி எனும் மலையடிவாரம் வரை ஓர் பாதை செல்கிறது. இங்கிருந்து கால்நடையாக மலைக்கு செல்ல வேண்டும். இதுவே சிவனொளிபாத மலைக்கு செல்லக்கூடிய இலகுவான பாதையாகும். இன்னுமோர் வழியும் இம்மலைக்குச் செல்வதற்கு உள்ளது. கொழும்பிலிருந்து இரத்தினபுரிக்குச் செல்லும் வழியில் உள்ள குருவிட்ட என்னுமிடத்திலிருந்து கிழக்கு நோக்கி எக்னெலிகொட - எம்புல்தெனிய - குருளுவான ஊடாக பாலபெத்தலே


என்னுமிடத்தை அடைந்து அங்கிருந்து கால்நடையாக மலைக்கு செல்வதாகும். இங்கு, வருடத்துக்குக் காஞ்சியால் நிறைவடைய, பக்தர்கள் தங்கள் விருப்பங்களை நிறைவேற்ற, மற்றும் வழிபாடு செய்யவும் வருகை தருகின்றனர். இதற்கிடையே, அவர்கள் இங்கு உள்ள இயற்கையின் அமைதியை அனுபவிக்கவும், ஆத்மதிருப்தியை அடையவும் வருகின்றனர். இது, ஆன்மிக மேன்மையை விரும்பும் அனைவருக்கும் ஒரு வரவேற்பு இடமாக அமைந்துள்ளது. சிவனொளிபாதமலை, அதன் சிறப்பு மற்றும் ஆன்மிகத்திற்கான முக்கியத்துவத்திற்காக, பக்தர்களால் மிகவும் மதிக்கப்படுகிறது.

### பக்தர்களின் வருகை

இலங்கையில் வாழுகின்ற நான்கு மதத்தவர்களும் பொதுவாக வழிபடுகின்ற தலமாக இந்த சிவனொளிபாதமலை இருக்கின்றது. அங்கே இருக்கின்ற பாதடித்தளம் தொடர்பாக பல்வேறுபட்ட மத நம்பிக்கைகள் காணப்பட்டாலும், இலங்கையிலுள்ள யாத்திரிகள் இறை தரிசனத்தை எதிர்பார்த்து அங்கே செல்கின்றனர். பௌத்தர்கள் புத்தரின் பாதம் அங்கே பதிந்துள்ளதால் “ஸ்ரீ பாத” என்றும், இந்து மதத்தினரைப் பொறுத்தவரையில் இந்த பாதடித்தளம் சிவபெருமானின் பாதம் எனவும் கருதி இதனை “சிவனொளிபாதமலை” என்றும் அழைக்கின்றனர். முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் நம்பிக்கையின் படி, உலகின் முதல் மனிதனாகிய ஆதம் சுவர்க்கத்திலிருந்து உலகத்திற்கு அனுப்பிய போது, உலகத்தில் முதலாவதாக கால் பதித்தது இங்கு தானென்று நம்பகின்றனர். எனவே கிறிஸ்தவர்கள் இதனை “அடம்ஸ்பீக்” என்றும் முஸ்லிம்கள் “பாவாதமலை” என்றும் அழைக்கின்றனர். இப்படி அனைவராலும் அரும்பெரும் புனிதத்தலமாக போற்றப்படும் சிவனொளிபாத மலையானது, இந்த நான்கு மதங்களின் ஒற்றுமைச் சின்னமாக திகழ்கிறது.

நிறைய சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. முதல் முறை தரிசனத்திற்குச் செல்பவர்கள் கையில் வெள்ளைத் துணியில் நாணயம் ஒன்றை வைத்து காணிக்கை முடிந்து செல்ல வேண்டும் எனபது ஐதீகம். அருவி விழும் இடத்தில் கையில் கட்டியுள்ள காணிக்கையைச் கழற்றி வைத்துவிட்டு, அந்த அருவியில் முகம், கை, கால் கழுவி தரிசனத்திற்குச் செல்ல வேண்டும். மலை உச்சியை அடையும் முன், ஊசி மலை உள்ளது. அந்த இடத்தில் ஊசியில் நூல் கோத்துக்கொண்டு,





அம்மலையின் ஆரம்ப இடத்தில் கட்டிவிட்டு, நூலைக் கையில் எடுத்துக்கொண்டு மலை ஏற வேண்டும். கையில் உள்ள நூல் அறுந்துவிடாமல் இறுதி அந்தம் வரும்வரை மலைவழியே கொண்டு சென்றுவிட்டால், மனத்தில் எண்ணிய காரியங்கள் நடக்கும் என்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

அதுமட்டுமல்ல, முதன் முறையாக வரும் யாத்திரிகர்கள் கைகளில் சுண்ணாம்பு பூசிக்கொள்ளுதல் போன்ற காரணம் தெரியாத கட்டாயச் சடங்குகளும் இருக்கின்றன. மலையுச்சியில் உள்ள காண்டா மணியை அடிப்பதன் மூலம் யாத்திரிகர்களின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது. சிவ பாதத்தைத் தரிசிக்க நிசங்கமல்ல என்ற அரசன் தனது “சத்துரங்கனி” என்ற படையுடன் சிவனொளி பாதத்தைத் தரிசிப்பதற்கு நிசங்கலென எனும் குகை வழியே வந்ததாக கூறப்படும் குகையொன்றும் காணப்படுகிறது. 1950ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட THE DRAGON GATEWAY என்று சொல்லக்கூடிய மகர தோரண வாயிலானது லக்சபான நீர்மின் உற்பத்தி நிலையத்தில் எந்தவித இயந்திரக் கோளாறுகளும் ஏற்படாது இருப்பதற்காகச் சமன் தெய்வத்திற்கு நேர்த்திக்கடன் செலுத்தும் வகையாக அமைக்கப்பட்டுள்ளது.

சிவனொளிபாதமலைக்கு செல்லும் போது, சுற்றுச்சூழலை அனுபவிக்கும் வகையில் பல சவால்கள் உள்ளன. மலைப் பயணிகள் கொல்லன்குளம், பொன்னம்பலா போன்ற குளங்களில் நீராடலாம். மேலும், பசுமை நிறத்திலுள்ள புல்வெளியில் உள்ள எளிய நடைபயணம், பயணிகளுக்கு ஒரு புதுமையாக அமைகிறது. அத்துடன், இந்த மலைப்பகுதியில் உள்ள பல்வேறு உணவுகளை ருசிக்கவும் வாய்ப்பு உண்டு.



சிவனொளிபாத மலையின் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமங்கள், உள்ளூர் கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றன. மக்கள் பாரம்பரிய வரலாற்றுகளைப் பேணுவதற்கான முயற்சிகளை மேற் கொண்டு, நீண்ட காலங்களில் ஏற்படும் மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றனர்.

சிவனொளிபாதமலை, அதன் இயற்கை அழகும், ஆன்மிகத் திறக்கான முக்கியத் துவத்தும் மற்றும் கலாச்சாரத்தின் செழிப்பும், எல்லோருக்கும் மனதை



மகிழ்விக்கின்றது. இந்த இடத்தில் வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள், அந்த உணர்வுகளை அனுபவித்து, மனம் மகிழ்ச்சியுடன் திரும்புகின்றனர். இங்கு வந்தால், நீங்கள் கடவுளின் அருகிலும், இயற்கையின் அழகிலும் நுழைந்து, ஒரு புதிய அனுபவத்தை அடைவர்கள். சிவனொளிபாதமலை, உங்கள் பயணத்தில் முக்கியமான இடமாக இருக்கும், மேலும் அது உங்கள் ஆன்மீகத்திற்கு ஒரு புதிய ஒளியையும் சேர்க்கிறது.

## புகழ் பெற்ற காமிக் கான் நிகழ்ச்சி

நியூயார்க் நகரத்தில் நடைபெற்ற காமிக் கான் நிகழ்ச்சியில் உலகின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த காமிக் கான் ரசிகர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். காமிக் கதைகளையும் சூப்பர் ஹீரோ படங்களையும் விரும்புவோர் ஆண்டுதோறும் ஆவலோடு எதிர்பார்க்கும் நிகழ்ச்சி காமிக் கான். உலகின் பல்வேறு பகுதிகளில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டாலும் அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் ஆண்டுதோறும் நடத்தப்படும் காமிக் கான் நிகழ்ச்சி சர்வதேச அளவில் புகழ் பெற்றது.



# யாழ்ப்பாணத்தில் சிறப்புற நிகழ்ந்த அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வு வரிசையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கச் சர்வதேச ஆய்வரங்கின் (JUICE) ஒரு பகுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தனது ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டை அதன் பொன்விழா ஆண்டில் "இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்: இலக்கியத்தினூடான மானுட விடுதலை" என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கிறது. மானுட விடுதலை தொடர்பில் இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியங்களின் பங்களிப்பினை பல்வேறு நோக்கு நிலைகளில் ஆய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதுமே அதன் நோக்கங்களாகும்.

தமிழியல் ஆய்வு மாநாட்டின் தொடக்க நிகழ்வுகள் 07.10.2024 அன்று காலை 09.00 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் நடைபெற்றது.

## ஆய்வுக்கட்டுரைகள்

இம் மாநாட்டுக்கான ஆய்வுக் கட்டுரைகள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள் முதலானோரிடமிருந்து கோரப் பட்டிருந்தன. ஆர்வத்துடன் பலர் இம்மாநாட்டுக்கான கட்டுரைகளை அனுப்பி வைத்திருந்தனர். இந்தியா, டென்மார்க் முதலான நாடுகளிலிருந்தும் ஆய்வுக் கட்டுரைகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

கிடைக்கப்பெற்ற நாற்பத்தெட்டு (48) ஆய்வுக்கட்டுரைகளும் உரிய முறைப்படுத்தலூடாக துறைசார் நிபுணத்துவம் உடையவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டன.

அவற்றுள் மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முப்பத்தெட்டு (38) ஆய்வுக்கட்டுரைகள் மட்டும் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கட்டுரைகள் பேராசிரியர். சு. வித்தியானந்தன் அரங்கு, இலங்கையர்கோன் அரங்கு,



மஹாகவி அரங்கு, டானியல் அரங்கு என நான்கு அரங்குகளில் அளிக்கை செய்யப்பட்டன.

## மூத்த படைப்பாளுமைகளுக்கான கௌரவம்

ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தில் பல்வேறு புலங்களில் கோலோச்சி வருகின்ற புலமையாளர்கள் சிலரை இனங்கண்டு, அவர்கள் இம்மாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ளனர். உயரா ளுமைக்கான கௌரவத்தினைப் பேராயர். வண. கலாநிதி. எஸ். ஜெபநேசன் அவர்களும், படைப் பாளுமைக்கான கௌரவத்தினை மூத்த மரபுக் கவிஞர் சோ. பத்மநாதன் (சோ. ப) அவர்களும் மூத்த எழுத்தாளருக்கான கௌரவங்களை குந்தவை (இரா. சடாச்சரதேவி), அ. யேசுராசா மற்றும் ஐ. சாந்தன் ஆகியோரும் பெறவுள்ளனர்.

## பல்கலைக்கழகத்துக்கும் சமூகத்திற்குமிடையிலான ஊடாட்ட நிகழ்வுகள்

தமிழ்மொழியை மீதான ஈடுபாட்டையும் இலக்கியப் பரிச்சயத்தையும் பரவலடையச்செய்யும் நோக்கில் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம்





உள்ளிட்ட பிற பீட மாணவர்களிடையே தமிழறிவுப் போட்டிப் பரீட்சையையும், வடக்கு மாகாணத்தின் பன்னிரண்டு வலயங்களிலுள்ள பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களிடையே பேச்சுப்போட்டி, தமிழறிவுப் போட்டிகளையும் இம்மாநாட்டின் இணை நிகழ்வுகளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## முப்பெரும் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கலைப்பீடமும் அப்பீடத்தின் ஓர் அங்கமாகிய தமிழ்த்துறையும் தமது ஐம்பதாவது ஆண்டுகளை நடப்பாண்டில் நிறைவுசெய்துள்ளன. அவ்வகையில் இவற்றின் பொன்விழாக் கொண்டாட்ட வரிசையில், இரண்டாம் நாள் நிகழ்வினை “முப்பெரும் விழா“ என்ற தலைப்பில் கவிதா நிகழ்வு, நடன அரங்கு, தமிழிசை அரங்கு, கூத்து அரங்கு என்றவாறாக ஒழுங்கமைத்தனர்.

இப்பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் அமரர். பேராசிரியர். சு. வித்தியானந்தன் அவர்கள் ஈழத்தின் பாரம்பரியக் கூத்துக்களை மீளுருவாக்கம் செய்வதில் மிகுந்த அக்கறை உடையவராக விளங்கினார்.

அவரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் இன்றும் உயிர்த்துடிப்புடன் வழங்கி வருகின்ற ஈழத்தின் தென்மோடிக்கூத்தின் செழுமையினை வெளிக்கொணரும் வகையில் “காத்தான் கூத்து“ இம்முறை இங்கு மீளவும் மேடையேற்றப்பட்டமை சிறப்பிற்குரியதாகும்.





இம்மாநாட்டுக்கான முழுமையான நிதிப்பங்களிப்பினை வழமை போன்று “சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசு அறக்கொடை நிதியம்“ வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

இம் மாநாட்டினையொட்டி தமிழியல் ஆர்வலர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகம் பயனுறும் வகையில் பிரபல பதிப்பகங்களின் புத்தகக் கண்காட்சிக்கும் புத்தக விற்பனைக்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## பூமிக்கு வெளியே இருந்து தீபாவளி வாழ்த்து



சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து சுனிதா வில்லியம்ஸ், நாட்டு மக்கள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். பூமிக்கு வெளியே சுமார் 260 மைல் தொலைவிலிருந்து தீபாவளி கொண்டாட்டங்களைக் கண்டுகளிக்கவிருப்பது குறிப்பிடத்தக்க அனுபவமாக இருக்குமென சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்தவாறே அவர் உற்சாகத்துடன் பேசியுள்ளார். கடந்த 5 மாதங்களாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் விண்வெளியில் இருந்தபடியே, அடுத்த மாதம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் வாக்களிக்கவிருப்பதும் குறிப்பிடத்தக்க சுவாரசியமான தகவல்களுள் ஒன்றாகும்.

# இணுவிலில் இலவச மருத்துவ சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டது...












ஏழை மக்களின் நல்வாழ்விற்காக இலவச மருத்துவ சேவை நிலையம் 19.10.2024 காலை 9.00 மணிக்கு திறந்த வைக்கப்பட்டது. காங்கேசன்துறை வீதி, இனுவிலில் அமைந்துள்ள இவ் மருத்துவ முகாம் அமைந்துள்ள வீட்டினையும் காணியையும் சிவபூமி அறக்கட்டளைக்கு, கதிரித்தம்பி செல்லத்துரை, கனகசபாவதி ஆனந்தராசா கும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கி நீங்கள் ஏதாவது தர்ம காரியத்திற்கு இதனைப் பயன்படுத்துங்கள் என அன்பாக செஞ்சொற்செல்வரிடம் வேண்டிக் கொண்டனர். இதன் அடிப்படையில் அபயம் அறக்கட்டளையின் உதவியுடன் சிவபூமி அறக்கட்டளை ஏழை எளிய மக்களின் அடிப்படை மருத்துவ சேவையினை இலவசமாக வழங்கும் நோக்கில், இலவச மருத்துவ நிலையம் திறந்து வைக்கப்பட்டது.










# தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நவராத்திரி உற்சவம்








எல்லாம் வல்ல பராசக்தியை துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி எனும் முப்பெருந் தேவிகளாக வழிபட்டு வீரம், செல்வம், கல்வி என்பவற்றை வேண்டி விரதம் நோற்கும் புண்ணிய காலம் நவராத்திரி. அந்த வகையில் ஈழத்தின் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு கும்பம் வைக்கப்பட்டு, கொலு மண்டபத்தோடு கூடிய வசந்த மண்டபத்தில் தினமும் விசேட பூசைகள் நடைபெற்று இறுதிநாள் விஜயதசமி அன்று காலை கன்னிவாழை வெட்டும் அதனைத் தொடர்ந்து மழலைகளுக்கான வித்தியாரம்ப நிகழ்வும் இடம்பெற்றது.











# மற்றவர்களுக்காகவும் சிந்தித்து செயல்படும் ஜப்பானியர்கள்

ஜப்பான் நாட்டில், சீக்கிரமாக பணியிடத்திற்கு வரும் ஊழியர்கள் பார்க்கிங் லாட்டில் தூரமாக வண்டியை நிறுத்துவதை வழக்கமாக கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்வதால், தாமதமாக வருபவர்களுக்கு கட்டிடத்திற்கு அருகில் நிறுத்தும் வசதி கிடைத்து நேரத்திற்கு அலுவலகம் செல்ல உதவியாக அமைந்துவிடுகிறது.

இந்த நடைமுறை பரஸ்பர மரியாதை மற்றும் பணியிடத்தில் அடுத்தவருக்கான கரிசனையை அதிகம் வலியுறுத்துகிறது. தாமதமாக வருபவர்களுக்கு எளிதாக பார்க்கிங் செய்ய உதவுவதன் மூலம் சீக்கிரம் வருபவர்கள் தங்கள் சக ஊழியர்களின் மன அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

இந்த சிந்தனைமிக்க செயல் ஒரு கூட்டுறவு சூழலை வளர்க்கிறது. வேலையில் நல்லிணக்கம், பச்சாதாபம் மற்றும் குழுப்பணி ஆகியவற்றின் முக்கியத்துவம் தான் ஜப்பானிய கலாச்சாரம். முக்கியமாக தனிநபரின் வசதியை விட கூட்டு நல்வாழ்வை வலியுறுத்தும் கலாச்சாரம்..

நமக்கு எப்படி வசதி என்று மட்டும் பார்க்காமல் பிறருக்கும் எது வசதி என்று பார்ப்பதால் தான் அவர்கள் இன்னும் வளர்ந்து முன்னேறிச் செல்கிறார்கள்.. பிறருக்காக யோசிப்பது சிறந்த பண்பு.. கூடுமானவரை பின்பற்றுவோம்!!!



ஐ.வி.மகாசேனன்




10

# என் காலுகள் வழியே...

## இலங்கையிலும் இந்தியாவிலும் மதங்கள்!

டெல்லியை பழக்கப்படுத்த ஆரம்பித்த நாட்களில், பல மாயையான எண்ணங்கள் மற்றும் விம்பங்கள் உடைக்கப்பட்டன. குறிப்பாக வடஇந்தியா சார்ந்த எனது பார்வை, தென்னிந்தியா சினிமாக்குள்ளாலேயே வடிவமைக்கப்பட்டிருந்தது. சினிமா ஊடகத்தின் காட்சிப்படுத்தல்கள் பலதும் நிஜம் அன்று, இயக்குனரின் எண்ணங்களை பார்வையாளர்களுக்குள்ளே புகுத்துகின்றார். நாமும் இயக்குனரின் பார்வையை நிஜம் என்று கடந்து செல்கிறோம். நிஜமும் காட்சிப்படுத்தலும் முரண்டுவதை, எனது எண்ணத்துக்குள் கிடைக்கப்பெற்ற நேரடியான அனுபவங்களில் அறியக்கூடியதாக இருந்தது. இப்பதிவு மதங்கள் அதுசார் நம்பிக்கைகள் எனது பார்வைக்குள் அனுபவத்துக்குள் தொகுத்துள்ளேன்.

நான் இந்து-சைவ ஆழமான விவாதத்துக்குள் செல்லவில்லை. பரந்த அளவில் பிள்ளையாரை முதல் வணக்கத்திற்குரிய கடவுளாகவும், சிவனை முழுமுதற் கடவுளாகவும், அம்மனை விஷ்ணுவின் தங்கையாகவும், முருகனை சிவன்-பார்வதியின் இளையவனாகவும், கிருஷ்ணனை விஷ்ணுவின் அவதாரமாகவும், பத்திரகாளியை ஆச்சியாக மச்ச மடை பரவி வழிபடுவதாகவும், இதனை தவிர அண்ணமார், இளந்தாரியார் என்ற கிராமிய





ஆக்கிரமிப்புகளுக்கு, இந்திய அரசிடம் உதவியை நாடலாம் என்ற எண்ணங்களுக்குள் சில இடங்களில் உரையாடி உள்ளேன். "இந்தியாவை ஆள்வது இந்துத்துவ சார்பு அரசாங்கம். இலங்கையில் இந்து ஆலயங்கள் மீது ஆக்கிரமிப்பு நிகழ்த்தப்படுகிறது." எனினும், வாசிப்பு தேடல்களில் பௌத்தம் சார்ந்து இந்தியா கொண்டுள்ள எண்ணங்களை புரிந்திருந்தேன். பௌத்தத்தின் பிறப்பு இந்தியாவிலேயே நிகழ்ந்துள்ளது. இந்து மதத்தின் ஓர் மறுசீரமைப்பு இயக்கமாகவே பௌத்தத்தை இந்தியாவின் இந்துத்துவமும் அனுசரிக்கிறது. தமிழ்நாட்டில் தொல்.திருமாவளவன் போன்ற இந்துத்துவ எதிர்ப்பாளர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். 32 கி.மீ இடைவெளியில் பௌத்தம் ஈழத்தில் ஆக்கிரமிப்பின் வடிவமாகவும் தமிழகத்தில் தலித்துகளின் பார்வையில் மீட்பு சக்தியாகவும் அவதானிக்கப்படுகின்றது.

தெய்வ வழிபாட்டு மரபுக்குள்ளேயே வளர்ந்துள்ளேன். இதனை முரண்பாடு அறியா பருவத்தில் இந்து என பரந்த பொருளிலும், முரண்பாட்டு புரிதலில் சைவம் என சுருக்கியும் எனக்குள் இதுவரை முரண்பட்டு கொள்கிறேன். இது என் அடையாளத்துக்கான விபரிப்பு என்பதற்கு அப்பால், வட இந்தியாவில் என் அனுபவத்தை பகிர்வதற்கான முன்னுரையாகவே உள்ளது.

நான் இலங்கையிலிருந்து அரசியல் ஆர்வலனாய் செயற்படுகையில், இந்தியாவின் பாரதீஜ ஜனதா கட்சி (பி.ஜே.பி) அரசாங்கத்தை இந்துத்துவ அரசாங்கமாக கருதி, இலங்கையில் ஈழத்தமிழர்ள் மீது நிகழ்த்தப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் ஒரு பகுதியான இந்து ஆலயங்கள் மீதான






எனவே இந்தியாவின் பார்வையில் ஈழத்தில் நடைபெறும் பௌத்தம்-இந்து முரண்பாடு அப்பன் பிள்ளை காணி பிரச்சினை. இதில் அயலவன் தலையிட வேண்டியதில்லை என்பதாகவே அமைகின்றது.

இந்த புத்தக அறிவுடன், டெல்லி அனுபவம் இலங்கையின் இந்து மதம், இந்தியாவின் இந்து மதம், இலங்கையின் பௌத்த மதம், இந்தியாவில் பௌத்த மதம் சார் வேறுபாடுகள் நிலைகள் அதிகம் அறியக்கூடிய சூழலை உருவாக்கியது. நான் முன்னைய பதிவுகளில் குறிப்பிட்டது போல் இந்தியா வடஇந்தியாவையே குறிக்கிறது. தென்னிந்தியா பற்றிய உரையாடல்கள் தமிழகம்/ தென்னிந்தியா என்ற பெயரிடலிலேயே விபரிப்பேன்.

ஆரம்பத்தில் இந்து மதம் சார் அடிப்படை வேறுபாடு, சிவன்-பார்வதி குடும்பத்தில் ஆரம்பிக்கிறது. ஈழம், தென்னிந்தியாவை தொடர்கிறது. எங்கள் வழிபாட்டில் சிவன் பார்வதியின் முதல் மகன் பிள்ளையார், இரண்டாவது மகன் முருகன். முருகனை தமிழ்க்கடவுள் எனவும் அழைப்போம். வடஇந்தியாவில் சங்கதி வேற. சிவன் பார்வதியின் முதல் மகன் கார்த்திகேயன், இரண்டாவது மகன் கணேஷ். இந்த பெயரிடல்களுள் தான் இவர்கள் அறிமுகமும் அவர்களுக்கு தெரியும். நான் என் நண்பர்களுக்கு முருகனையும், பிள்ளை யாரப்பாவையும் அறிமுகப்படுத்த பெரும் சிரமப்பட்டேன். அப்பாவை சொல்லி, முதிசத்த சொல்லி தான் கடவுள் பிள்ளைகளுக்கு அறிமுகத்தை சொல்ல வேண்டி இருந்திச்சு. அதுசரி ஒருவேளை நம்மட ஆட்கள் சாதி அறியுற நுட்பத்த அவங்களும் பயன்படுத்தினாங்களோ தெரியல. வடக்கு நண்பர்களின்ட சாதி விளக்கத்தை இன்னொரு பதிவில தான். அது தனிக்கதை.



இங்க மதத்துக்க வருவம். சிவன்-பார்வதி குடும்ப கதை முடிஞ்சுது. அடுத்து மும்மூர்த்திகளில மற்றைய ஒருவரான விஷ்ணுட போவம். அங்க அவருக்கு அந்தளவு கிராக்கி இல்லை. நாமதான் அவரை பெருமாளாக ஆலயங்கள் நிறுவி பூசிக்கிறோம் ஆனால் வடஇந்தியாவில் அவரது அவதாரங்கள் ஆன கிருஷ்ணன் அதிலும் இராமர் இன்னும் சிறப்பாக உள்ளார். நாங்கள் இம்மரபிலும் அதிகம் மாறுபடுகிறோம். எங்கள் வழிபாடுகளில் மூலக்கடவுளே முதன்மையாகி உள்ளார்கள். உதாரணமாக சொன்னால் சிவன், விஷ்ணு, முருகன், பிள்ளையார், அம்மன் என்று வரிசை நீளும். அதிலும் சிவன் லிங்கமாகவும், முருகன் வேலாகவும் வழிபடும் மரபை கொண்டவர்கள். இன்று கிருஷ்ணர் ஆலயங்கள் வந்து பெருகிலும், ராமர் கொஞ்சம் பின்னுக்கு தான் நிற்கிறார். இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தில் சீதா எலிய என்ற பிரதேசம், சீதை சிறைவைக்கப்பட்ட இடமாக நம்பப்படுகிறது. அங்கு







உள்ள ஆலயமும் சீதை அம்மன் கோவிலாக தான் உள்ளது. ராமருக்கு கர்ப்பகிரகத்தில் இடம் இல்லை.

மேலும் பௌத்தத்தை விஷ்ணுவின் அவதாரத்தோடு வடஇந்தியர் இணைக்கின்றனர். பௌத்தர்களின் இறைவனான கௌதம புத்தரும் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்று என வடஇந்தியாவில் நம்பப்படுகிறது. 2024ஆம் ஆண்டு, இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் திறக்கப்பட்ட அயோத்தி குழந்தை ராமர் ஆலய கர்ப்பக்கிரக சிலையின் பீடத்தில் விஷ்ணுவின் தசாவதாரம் இணைக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்பதாவது அவதாரமாக புத்தரும் காணப்படுகின்றார். நாம் நம்பும் “பலராம்” எனும் எட்டாவது அவதாரம் வடஇந்தியாவின் தசவதாரத்தில் இல்லை என்பது மேலதிக தகவல். பாரதத்தில் முதன்மைப்படுத்தப்படும் ராமரின் இன்னொரு யுக அவதாரமாக பார்க்கும் புத்தரையும், அவரது

நெறிமார்க்கத்தை பின்பற்றும் பௌத்தர்களை இந்தியா பகைக்குமா? பௌத்தத்தை ஆக்கிரமிப்பு சக்தியாக ஏற்குமா? என்பதை ஈழத்தமிழர்கள் சிந்திக்க தலைப்படுகிறோம். புத்தர் ஞானம் பெற்றதாக நம்பப்படும் புத்தகயை மற்றும் புத்தர் பரிநிர்வானம் அடைந்ததாக நம்பப்படும் குசிநகருக்கும் செல்ல வேண்டும். இந்து இந்திய மரபில் பௌத்தத்தை அறிய வேண்டும்.

நண்பர்கள் அடிக்கடி மதங்கள் தொடர்பான உரையாடலில் கூறுவது உண்டு, “இந்து மதம் மிகவும் சகிப்புத்தன்மை உள்ள உயரிய ஜனநாயக பண்பை கொண்டது”. அதாவது எதனையும் முரண்பாடாக கருதாது, தன்னுடையதாக ஏற்றுக்கொண்டு பயணிக்கும் தன்மையை கொண்டது என்பார்கள். அவ்வாறுதான் பௌத்தத்தை இந்து மதத்தில் இருந்து வேறுபட்டதாக பார்க்கவில்லை. அவ்வாறேதான் இந்தியாவில் உருவாகிய சீக்கிய மதத்தையும் இந்து மதம் தனக்குள் ஒரு பிரிவாகவே கருதுகிறது. மேற்காசியாவில் பிறந்து வளர்ந்த இயேசுநாதரும் நபிகளும் கொஞ்சம் விலகி, தென்னாசியாவில் இந்திய உபகண்டத்தில் பிறந்திருந்தால் கிறிஸ்தவமும் இஸ்லாமும் ஏன் யூதமும் இந்திய நாட்டில் இந்து மதத்திற்குள் உள்வாங்கப்பட்டிருக்கலாம்.

ஈழத்தமிழர்கள் இந்தியாவை தமிழக எல்லைக்குள்ளேயே அணுகுகிறோம். எனினும், ஆளும் ஒன்றிய அரசு அதாவது வடஇந்தியாவின் பார்வைக்குள், தென்னிந்தியாவே இந்தியாவிற்குள் இல்லை என்பது தான் பெருங்கவலை. அவர்கள் பெரும்பாலும் இந்தியா என்ற அழைப்புக்குள் வடஇந்தியாவை சுருக்கி கொள்கின்றார்கள்.



இந்து மதம் பற்றிய வாதங்களும் பார்வைகளுமே தென்னிந்தியா மற்றும் வடஇந்தியாவிற்குள் மாறுபடுகிறது. அதுமட்டுமன்றி தமிழக அரசியல், வடஇந்தியனின் இந்து மதம் தொடர்பான எண்ணங்களாய் அளிக்கப்படும் விம்பங்களுமே மாறுபடுகிறது. தமிழகத்தின் தொடரிகளாய், தொப்புள் கொடி உறவாய், தமிழகம் வரையும் விம்பங்களுக்கு உள்ளேயே எமது எண்ணங்களும் கட்டமைக்கப்படுகிறது. எனினும் டெல்லியில் வடஇந்திய நண்பர்களுடனான உரையாடல்கள், விம்பங்கள் பல மரபார்ந்த எண்ணங்களை உடைத்தது.

மதத்தை தேட தேட புதிராகிறது! வாதாட வாதாட நம் மதத்திற்கு பெயர் தான் என்ன? நம் மத நம்பிக்கைகள் தான் என்ன? விடையற்ற பதில்களே மீதமாகிறது.

இந்து மதம் ஆரிய மதம், எங்கள் மீது திணிக்கப்பட்டு விட்டது. இன்னும் சொன்னா எங்களை விழுங்கி விட்டதென விபரிப்பார்கள். ஆன வடஇந்திய நண்பர்களுடன் உரையாடுகையில், "நாம காட்டான்களாக இருந்தோம். இந்து மத இலக்கியங்கள், அறிவூட்டல்கள் தென்னிந்தியாவிலிருந்தே வந்ததாக, தென்னிந்தியாவை சிறப்பாக உச்சி குளிர்வார்கள்." அதாவது ஆதி சங்கராச்சாரியாரை புகழ்வார்கள்.

ஆதி சங்கரர், ஒரு இந்திய தத்துவஞானி ஆவார். சுமார் கி.பி 788-820 வரை வாழ்ந்தார். இவர் இந்திய தத்துவ வரலாற்றில் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களில் ஒருவராக கருதப்படுகிறார். அத்வைத வேதாந்தத்தின் தத்துவத்திற்காக மிகவும் பிரபலமானவர். இது அனைத்து தோற்றங்களுக்கும் அடிப்படையான ஒரே உண்மை உள்ளது என்று கற்பிக்கிறது. இஸ்லாமியப் படையெடுப்புகளுக்குப் பிறகு இந்து மதத்தைப் புத்துயிர் பெறச் செய்து, பல்வேறு இந்து சிந்தனைப் பள்ளிகளை ஒருங்கிணைத்த பெருமையும் சங்கரருக்கு உண்டு. சங்கராச்சாரியாரின் அரசியல் வாழ்க்கை இந்திய வரலாற்றில் மிக முக்கியமான ஒன்றாகும். அவரின் செயற்பாடே, இந்தியாவை ஒரு மதத்தின் கீழ் இணைக்க முடிந்தது. அவருடைய போதனைகள் இன்றும் செல்வாக்கு செலுத்துகின்றன.

இந்தியாவின் ஒருங்கிணைக்கப்பட்ட மதப்பண்பியலுக்குள் பண்டிகைகளும் புதுக்கதைகளாய் உலாவுகிறது.

தொடர்ந்து கொண்டாடுவோம்....



# ஈழத்தில் அறப்பணிகள் ஆற்றும் அபயத்தின் ஆண்டுவிழா லண்டனில் சிறப்பாக நடைபெற்றது









சிவபூமி அறக்கட்டளை ஊடாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட ஈழத் திருநாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு வகைகளில் அபயம் அறக்கட்டளை, மனிதாபிமான உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்கள், அபயம் அறக்கட்டளையின் ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

செஞ்சொற்செல்வருடன் மிக நெருங்கிய உறவைக் கொண்டுள்ள அபயம் அறக்கட்டளையும் அதன் பணியாளர்களும் விடுத்த அன்பான அழைப்பினை ஏற்று, லண்டன் நகரில் நடைபெற்ற அபயம் அறக்கட்டளையின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அபம் அறக்கட்ளை ஈழுத்தமிழ் மக்களுக்கு வழங்கி வரும் மனிதாபிமான உதவிகளுக்கு தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.







மம்முட்டி

# பாம்பும் ஏணியும்
## விளையாட்டின் கதை

பாம்பும் ஏணியும் விளையாட்டின் மீதான தோற்றம் பற்றிய வரலாற்றுப் பதிவுகள் இல்லை என்றாலும், இது இந்தியாவில் மிகவும் பழமையான விளையாட்டுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்த கவிஞர் ஞானதேவர் என்பவர் இந்த விளையாட்டை உருவாக்கியதாகக் கருதப்படுகிறது. அவர் உருவாக்கிய பரமபதம் என்ற விளையாட்டே இன்றைய பாம்பும் ஏணியும் விளையாட்டாக உருவெடுத்திருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது.



பரமபதம் என்பது மோட்சத்தை அடைவதற்கான ஒரு பயணத்தை குறிக்கும். இதில் ஏணிகள் புண்ணியத்தையும், பாம்புகள் பாவத்தையும் குறிக்கின்றன. இந்த விளையாட்டின் மூலம் நம்முடைய கர்ம வினைகளின் பலன்களைப் பற்றி சிந்திக்க வைப்பதாக நம்பப்படுகிறது.

பரமன் என்றால் திருமால் என்று பொருள். பரமபதம் என்றால் திருமாலின் பாதம் என்ற பொருளும் உண்டு. இதன் அடிப்படையிலேயே பரமபதம் என்ற பெயர் வந்திருக்க வேண்டும் எனச் சொல்லப்படுகிறது. தசாபதம், அஷ்டாபதம் போன்றவை பரமபத விளையாட்டு வகையைச் சார்ந்தது ஆகும். இந்துத்துவம் மற்றும் ஆன்மிகத்தின் மதிப்பை இளையவர்களுக்கு கற்றுத் தர உருவாக்கப்பட்ட இந்த விளையாட்டு,



மோட்ச பதம், பரமபதம், மோட்ச பத் (ஹிந்தி), மோட்ச படமு (தெலுங்கு) என இந்தியாவில் பலவாறு அழைக்கப்படுகிறது.

ஏற்றம் இறக்கம் இரண்டும் வெற்றியாளர் வாழ்விலும் உண்டு என்பதுதான் நிஜம். ஏறுவதற்குத்தான் ஏணி வேணும். இறங்குவதற்கு பாம்புக் கடியே போதும் என்பார்கள். அதற்குக் காரணம், பாவம் செய்தால் வாழ்வில் கீழே இறங்குவர் என்பதையும் புண்ணியம் செய்தால் சொர்க்கமாகிய திருமால் உறையும் வைகுண்டத்தை எளிதாக அடையலாம் என்பதையும் பரமபத விளையாட்டு உணர்த்துகிறது.



ஆரம்பத்தில் தசபதம் என 10 x 10 கட்டங்களில் விளையாடப்பட்டு, பின் நூறு கட்டங்களாக வளர்ந்ததாகச் சான்றுகள் கூறுகின்றன. 1892ம் ஆண்டு பிரிட்டிஷார், இவ்விளையாட்டை இங்கிலாந்துக்குக் கொண்டுசென்று, ஸ்நேக் ரூ லேடர்ஸ் / சுட்ஸ் என்ற பெயரில் விக்டோரியன் முறைப்படி மாற்றினார்கள். 1943ம் ஆண்டு அமெரிக்காவுக்கு இவ்விளையாட்டு சென்றடைந்த நேரத்தில், நல்லொழுக்க நெறிகள் மாற்றத்திக்கு ஆளாகி இருந்தன. கனடாவில் டோபோகான் ரன்ஸ் என்றழைக்கப்படுகிறது.

காலப்போக்கில் இந்த விளையாட்டு பல வடிவங்களில் மாறியது. குழந்தைகளுக்கான எளிய வடிவங்களிலிருந்து, பெரியவர்களுக்கான சிக்கலான வடிவங்கள் வரை பல வகைகள் உருவாயின. இந்தியாவில் தோன்றிய இந்த விளையாட்டு, பிற நாடுகளுக்கும் பரவி, அங்கேயும்



பிரபலமானது. ஆனால், ஒவ்வொரு நாட்டிலும் இந்த விளையாட்டு சற்று மாறுபட்ட வடிவங்களில் இருக்கும்.

பாம்பும் ஏணியும் விளையாட்டு மிகவும் எளிமையானது. இதில் பல வீரர்கள் விளையாடலாம். பாம்பும் ஏணியும் வரையப்பட்ட வரைபடத்தை தரையில் விரித்து வைக்கவும். இதில் பல கட்டங்கள் இருக்கும். ஒவ்வொரு கட்டத்திலும் எண்கள் எழுதப்பட்டிருக்கும். சில கட்டங்களில் ஏணிகள், சில கட்டங்களில் பாம்புகள் வரையப்பட்டிருக்கும். ஒவ்வொரு வீரரும் தங்களுக்குக் கிடைத்த காயை வரைபடத்தின் தொடக்கக் கட்டத்தில் வைக்க வேண்டும். வீரர்கள் தங்கள் முறையாக பகடையை உருட்டி வரும் எண்ணிக்கைக்கு ஏற்ப தங்கள் காயை நகர்த்த வேண்டும். ஒரு வீரரின் காய் ஏணியின் அடிப்பகுதியில் விழுந்தால், அவர் ஏணியைப் பின்பற்றி மேலே செல்ல வேண்டும். ஒரு வீரரின் காய் பாம்பின் தலையில் விழுந்தால், அவர் பாம்பைப் பின்பற்றி கீழே செல்ல வேண்டும். இறுதி கட்டத்தை முதலில் அடையும் வீரர் வெற்றி பெறுவார்.

பகடையை உருட்டி எண்ணிக்கையை கணக்கிட வேண்டும் என்பதால், இது கணித அறிவை வளர்க்க உதவும். மற்ற வீரர்களுடன் விளையாடுவதால், தொடர்பு திறன் மேம்படும். இந்த விளையாட்டு ஆன்மீக ரீதியாக பல அர்த்தங்களையும் கொண்டுள்ளது. ஏணிகள் வாழ்க்கையில் நாம் அடையும் உயர்வுகளையும், பாம்புகள் நாம் சந்திக்கும் தாழ்வுகளையும் குறிக்கின்றன.

**இவை எல்லாவற்றையும்விட, வாழ்க்கையில் எதிர்பாராத நேரங்களில் வெற்றியும் வரும், தோல்வியும் கிடைக்கும். தொடர்ந்து போராடினால் நிச்சயம் வெற்றியை அடையமுடியும் என்பதையும் சொல்லிக்கொடுக்கும் தன்னம்பிக்கை தரும் விளையாட்டு இது.**

